கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 262/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 ஜோதிலெட்சுமி M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 19.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.1 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. எனது சித்தப்பா சுப்பிரமணியை தெரியுமா என்றால் தெரியாது. அவர் சிறுவயதிலேயே இறந்து விட்டார். தாவா சொத்து எனது தந்தை பெரியசாமி மற்றும் எனது சித்தப்பா சுப்பிரமணி பெயரிலும் பூர்வீகமாக அனுபவத்து வா.சா.ஆ–1 பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது சித்தப்பா எனது இடத்தில் வசிக்கவில்லை. எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணம் யார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா என்றால் எனது தந்தை பெரியசாமி மற்றும் சுப்பிரமணி பெயரில் உள்ளது.

2. பாகப்பிரிவினையின் படி தாவா சொத்தை வாதி அனுபவித்து ஊராட்சி மன்றத்தில் வீட்டு வரி விதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து எனது தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தா என்றால் இல்லை. நத்தம் நிலம் ஆகும். தாவா சொத்து நடுவில் வாதிக்கும் கிழக்கே வாதியின் உடன்பிறந்த சகோதரர் வடிவேலுக்கும், மேற்கே வாதியின் உடன்பிறந்த சகோதரர் அண்ணாத்துரைக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. எனது தந்தை அவரது மகன்களுடன் இருந்தார் என்றால் சரியல்ல. நான் தான் எனது தந்தையை கவனித்து வந்தேன். பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனு செய்தால் மேற்படி பி.சா.ஆ.1 அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது கணவரிடன் கேட்டு தான் சொல்ல முடியும்.

3. பி.சா.ஆ.1 ன் நகலில் எனது தந்தை பெயரில் உள்ள பட்டாவை இணைத்துள்ளதால், மேற்படி பட்டாவை வட்டாட்சியர் அலுவலகத்தின் ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்ப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணதில் காண்பிக்கப்பட்ட எனது தந்தை பெயரில் உள்ள பட்டாவானது போலியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்திருந்தால் மேற்படி ஆவணத்தின் உண்மை விவரம் தெரிய வந்துவிடும் என்பதால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணம் இவ்வழக்கிற்கு பின்னிட்டு 2024ம் ஆண்டில் எனது பெயரை சேர்த்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தந்தை மற்றும் எனது சித்தப்பா பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரியாக படிக்க முடியவில்லை.

4. எனது தந்தை மற்றும் சித்தப்பா பெயர்களுடன் சேர்ந்து மேற்படி கூட்டுப்பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தையின் ரேகையை தவறாக பயன்படுத்தி போலியாக பி.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னை நல்ல படியாக சீர் வரிசை செய்து எனது அண்ணன்கள் திருமுணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தாவா சொத்தின் அருகே ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரை போட்டு குடியிருக்கிறேன். பஞ்சாயத்தில் மேற்படி வீட்டீற்கு வரி விதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால் பஞ்சாயத்தார் வரி விதிப்பு எதுவும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை. மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது.

5. எனது பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறேன். எனது தந்தையின் சுய நினைவு இல்லாத போது போலியாக பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றும், எனவே அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**